16.11.2017

தினமணி

## அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு

திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையில் இருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்காக புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 47,117 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது. இந்த ஆண்டில் குடிநீருக்காகவும், பாசனத்துக்காகவும் அணையில் ஒரு சில முறை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. குறுவை சாகுபடிக்காக மொத்தம் 120 நாள்களுக்கு முறை வைத்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கரூர் வரையில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்களுக்கு அக்டோபர் 1-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் 47,117 ஏக்கர் பயன் பெற்றது. இந்நிலையில் இதே பகுதிகளுக்கு 2-ஆவது சுற்றாக அணையில் இருந்து புதன்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அணையைத் திறந்துவைத்தார். மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி, ஈரோடு மக்களவை உறுப்பினர் எஸ்.செல்வகுமார சின்னையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பொதுப் பணித் துறை அதிகாரிகள் கூறுகையில், 'தற்போதைய தண்ணீர் திறப்பால், திருப்பூர் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 416 ஏக்கர், கரூர் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 451 ஏக்கர் என மொத்தம் 21 ஆயிரத்து 867 ஏக்கர் பயன் பெறும்' என்றனர்.

## மானாவாரி நிலக்கடலை பயிர் சாகுபடியில் அதிக மகசூல்



பெரியாறு-வைகை பாசனப்பகுதியில் கால்வாய்களில் தண்ணீர் வராதபகுதிகளிலும் புன்செய்நிலங்களிலும் மானாவாரியாக நிலக்கடலை சாகுபடிசெய்வதனால் அதிக அளவு மகசூல் பெறவாய்ப்புள்ளது.

உலகஅளவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா 3-வது இடத்திலும், நிலக்கடலை உற்பத்தியில் முதலிடத்திலும் உள்ளது. இந்தியாவில் சாகுபடிப்பரப்பளவில் 40 சதவிகிதம் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. நிலக்கடலையில் 47 சதவிகிதம் முதல் 53 சதவிகிதம்வரையிலும் எண்ணெயும் 26 சதவிகிதம் புரதசத்தும் உள்ளது. நிலக்கடலை பயிர் 70 சதவிகிதம் மானாவாரியாகவும் 30 சதவிகிதம் இறவைப்பாசனத்திலும் சாகுபடியாகிறது.

தமிழகத்தில் மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலும் 56ஆயிரத்து 163 எக்டேரில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. இதில் 84 சதவிகிதம் மானாவாரியாக உள்ளது. அதிலிருந்து 10.98 லட்சம் டன்கடலை உற்பத்தியாகிறது. மற்ற நாடுகளுடன் மகசூலை ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் குறைந்த அளவு மகசூலையே பெறுவது தெளிவாகும். சராசரிப்க்டேருக்கு 1400 கிலோ நிலக்கடலை கிடைக்கிறது.

**இலைவழிஉரம்-**

நிலக்கடலை பயிரில் மகசூலை அதிகரிக்க தமிழ்நாடு வேளாண்.பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளைச்செய்து வருகிறது. நிலக்கடலையைப் பொருத்தவரை அதிக அளவில் பூக்கள் பூக்கும். அதில் பாதியளவு பூக்கள் காய்களாகும். மீதிப்பூக்கள் உதிர்ந்துவிடும். இதைக்கட்டுப்படுத்துவதன் மூலம் நிலக்கடலை மகசூலை 15 சதவிகிதம் அதிகரிக்கமுடியும்.

தமிழ்நாடு வேளாண். பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ள கிரவுநட்ரிச் ஊட்டச்சத்து பயிர்ஊக்கியை பயன்படுத்தவேண்டும். எக்டேருக்கு 2.250 லிட்டர் ஊட்டச்சத்தினை 200 லிட்டர் நீரில் கரைத்து, கைத்தெளிப்பான் மூலமாக நிலக்கடலை பயிர் முழுமையாக நனையுமாறு காலை அல்லது மாலைநேரத்தில் தெளிக்கவேண்டும். இதில்,தேப்க்கேற்ப ஒட்டும் திரவத்தை கலக்கலாம். ஆனால், இக்கரைசலில்பூச்சி,பூஞ்சாள மருந்தை கலக்கக்கூடாது.

நிலக்கடலை செடி பூக்கும் தருணத்துக்கு முன்பும் அதிலிருந்து15 நாட்களுக்குப் பின்னரும் தெளிக்கவேண்டும். இதனால், நிலக்கடலை பயிர் வறட்சியைத்தாக்குப்பிடிக்கும் திறன் அதிகரிக்கும். மகசூலும் அதிகரிக்கும். தண்ணீர் பற்றையில் பயிர் தாக்குப்பிடிக்க நிலக்கடலை சாகுபடிக்கு தரிசில் எக்டேருக்கு 3 டன் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவை தழைச்சத்தாக அடியுரமாக போடவேண்டும். இதனால், மண்ணில் ஈரப்பதம் பாதுகாக்கப்படும். மேலும், நிலக்கடலைசெடியில் பொட்டாசியம் குளோரைடு 5 சதம் ஒருலிட்டர் நீரில்கரைத்து வையான அளவு செடியில் தெளிக்கவேண்டும். இதனால், காய்கள் அதிகரிக்கும். தற்போது அதிகஇடைவெளியில் பெய்துவரும் பருவமழை நிலக்கடலை சாகுபடிக்கு பேருதவியாக அமையும் என அருப்புக்கோட்டை மானாவாரி பயிர் ஆராய்ச்சிநிலையத்தின் வேளாண்.அறிவியல்மைய ஆராய்ச்சியாளர்கள்ப.பாக்கியாத்துசாலிஹா, இரா.விஜயலட்சுமி ஆகியோர் தெரிவித்தனர்.

## லாபம் தரும் தேனீக்கள்



பொள்ளாச்சி: மழைப்பொழிவு குறைந்து வறட்சியால் விவசாயம் செய்ய முடியாமல் நஷ்டத்தைச் சந்தித்து வரும் விவசாயிகளிடையே, மாற்றி யோசித்து தண்ணீர்த் தேவையின்றி தேனீ வளர்ப்பில் மாதம் ரூ. 50,000-க்கு மேல் வருவாய் ஈட்டி வருகிறார் பொள்ளாச்சி விவசாயி விவேக்.

வறட்சி, நோய்த் தாக்குதல், விளைபொருளுக்கு கட்டுபடியான விலை கிடைக்காதது போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடன் தொல்லையால் சில விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு தற்போதைய விவசாயத்தின் நிலை இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் சில விவசாயிகள் மட்டும் விவசாயத்துடன், விவசாயம் சார்ந்த மாற்றுத் தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய சூழலில், பொள்ளாச்சியை அடுத்த பெரியபோதுவைச் சேர்ந்த விவசாயி விவேக், தேனீ வளர்ப்பின் மூலமாக மாதம் ரூ. 50,000-க்கு மேல் வருவாய் ஈட்டி வருகிறார்.

ஆனைமலையைச் சேர்ந்த எம்.வி.சுப்ரமணியம் என்ற விவசாயி வாயிலாக கடந்த 2015- இல் தேனீ வளர்ப்பு குறித்து விவேக் அறிந்துகொண்டார். அவரிடமிருந்து 7 பெட்டிகளுடன் தேனீயை வாங்கி வளர்க்கத் துவங்கினார். தேனீ வளர்ப்பில் அனுபவம் இல்லாவிட்டாலும் முன்னோடி விவசாயியான எம்.வி.சுப்ரமணியத்தின் ஆலோசனைப்படி செயல்பட ஆரம்பித்தார். கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அங்கும் தேனீ வளர்ப்புக்குப் பயிற்சி பெற்றார். அந்தமான்- நிகோபார், புதுதில்லி ஆகிய இடங்களிலும் தேனீ வளர்ப்பு குறித்துத் தெரிந்து கொண்டார்.

ஆரம்ப காலத்தில் தேனீ வளர்ப்பு அவருக்கு கடினமாகத் தோன்றியது. அவரால் வருவாய் ஈட்ட முடியவில்லை. ஆனால், தனது விடாமுயற்சியால் தொடர்ந்து தேனீக்களின் வாழ்க்கை முறை பற்றி படிப்படியாகத் தெரிந்து கொண்டார்.

7 பெட்டிகளில் வளர்க்கப்பட்ட தேனீக்கள், 14, 100 என அதிகரித்து தற்போது ஆயிரம் பெட்டிகளை எட்டிவிட்டன.

விவேக் தனது தென்னந்தோப்பின் பல இடங்களில் தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்துள்ளதுடன், சுற்றுவட்டார விவசாயிகளின் தோட்டங்களிலும் தேனீ பெட்டிகளை வைத்து தேனை சேகரித்து வருகிறார்.

இது தவிர, கேரள மாநிலத்தின் சில பகுதிகள், திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கும்

சென்று, தேனீப் பெட்டிகளை வைத்துள்ளார். ஆரம்பத்தில் தேனீ வளர்ப்பில் தடுமாறிய விவேக், தற்போது பிற விவசாயிகளுக்கும் தேனீ வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, தேனீக்களுடன் பெட்டிக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரையிலான விலையில் விற்பனை செய்கிறார். அவற்றை வாங்கிச் செல்பவர்களின் இடத்துக்கே சென்று பராமரிப்பு விளக்கமளித்தும் வருகிறார்.

குறிப்பாக, கேரள வனத்துறையினருக்கு தேனீக்களுடன் பெட்டிகளை இவர் விற்பனை செய்துவருகிறார். ஒரு தேனீப் பெட்டியில் ஓர் ஆண்டுக்கு 9 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை தேன் எடுக்கலாம். ஒரு லிட்டர் தேன் ரூ. 350 முதல் ரூ. 400 வரை விற்பனையாகிறது. தேன்மெழுகும் விற்பனையாகிறது. இதன்மூலமாக மாதம் ரூ. 50,000-க்கு மேல் வருவாய் ஈட்டி மற்ற விவசாயிகளுக்கு முன்னோடியாக விவேக் திகழ்கிறார்.

தனது விவசாயத் தோட்டத்தில் தேனீக்களை வளர்ப்பதால், தென்னை மரங்களில் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று மகசூல் அதிகரிப்பதாகவும் அவர் கூறுகிறார். மேலும் அவர் கூறியதாவது:

தேனீ வளர்ப்பு என்பது விவசாயம் சார்ந்த உபதொழில். தேனீக்கள் விவசாயத்துக்கு உதவிகரமாக இருக்கின்றன. தேனீ வளர்ப்புக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதில்லை. தேனீக்களை வளர்க்க நிழல்தரும் இடம், அதிகப் பூக்கள் உள்ள இடம், இயற்கை சார்ந்த சூழல் போன்றவை இருந்தால் சிறப்பாக இருக்கும். குறைந்த முதலீட்டில், ஒரு விவசாயி தனது இடத்தில் 50 பெட்டிகளில் தேனீக்களை வளர்த்தாலே மாதம் ரூ. 10,000 வரை வருவாய் ஈட்ட முடியும். இதற்கு பராமரிப்புப் பணி குறைவுதான்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழத்தில் என்னை சிறந்த தேனீ வளர்ப்பாளர் என கௌரவித்தனர். கோவை மாவட்டத்தில் சிலர் மட்டுமே இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றனர். சிறு, குறு விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த சிறந்த வர்த்தக வாய்ப்பு இது. கால்நடை வளர்ப்பை விட அதிக லாபம் கிடைக்கும். இந்திய வகை தேனீக்கள் வளர்ப்புக்கு எளிதாக உள்ளன என்றார்.

**ரூ. 250 கட்டணத்தில் பயிற்சி**

தேனீ வளர்ப்பு குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் ஸ்ரீநிவாசன் கூறியதாவது:

தேனீ வளர்ப்பு, விவசாயிகளுக்கு சிறந்த வகையில் பயன்தரும். தேன் எடுப்பதற்காக மட்டும் தேனீக்கள் வளர்க்கப்படுவதாக நினைக்கக் கூடாது. தேனீ வளர்ப்பதால் அயல் மகரந்தச் சேர்க்கை வாயிலாக விவசாயத்தில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை

மகசூல் அதிகரிக்கும். தேனீக்கள் வளர்ப்பு தொடர்பாக, ஒவ்வொரு மாதமும் 6-ஆம் தேதி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி தேவைப்படுவோர் ஒவ்வொரு மாதமும் 6-ஆம் தேதி பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவரை, காலை 9 மணிக்கு அனுகினால், ரூ. 250 கட்டணம் செலுத்தி பயிற்சி பெற முடியும். பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படுகிறது என்றார்.

## விவசாயிகள் காப்பீடு கட்டணம் செலுத்த நவ30 வரை காலக்கெடு

தமிழகத்தில் நெற்பயிர் நடவு செய்துள்ள விவசாயிகள் வரும் 30 -ஆம் தேதிக்குள்(நவ.30) அதற்கான காப்பீட்டுக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று தமிழ்நாடு வேளாண் உற்பத்தித் துறை ஆணையர் ககன்தீப் சிங் பேடி கேட்டுக் கொண்டார்.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் கள விளம்பரத் துறை, தனது கள விளம்பர அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கை சென்னையில் புதன்கிழமை நடத்தியது. பயிலரங்கை தொடக்கி வைத்து ககன்தீப் சீங் பேடி பேசியது:

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் கடந்த ஆண்டு சேர்ந்த விவசாயிகள் எண்ணிக்கை, அதற்கு முந்தைய ஆண்டைவிட இருமடங்கு அதிகரித்து 15 லட்சமாக இருந்தது.

இந்தத் திட்டத்தில் பயிர்களின் சேத மதிப்பீடு கிராம அளவில் மேற்கொள்ளப்படுவதால் விவசாயிகள் காப்பீடு பெறுவது எளிதாகிறது. தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் பயிர்க் காப்பீடு மூலம் விவசாயிகள் பெரிதும் பலனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் நெற்பயிர் நடவு செய்துள்ள விவசாயிகள் இந்த ஆண்டுக்கான பயிர் காப்பீட்டுக் கட்டணத்தை வரும் 30 -ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். இந்த காலக்கெடுவுக்கு பிறகு பணம் செலுத்தினால் காப்பீடு கிடையாது.

தமிழக அரசு நுண்ணீர் பாசனத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன வசதிக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ரூ.1,200 கோடி செலவில் 7 லட்சம் ஏக்கர் நிலம் சொட்டு நீர் பாசன வசதி பெற்றுள்ளன. தமிழகம் முழுவதும் 67 லட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

15 இடங்களில் சந்தைகள்: விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மாநில அளவில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக மின்னணு விற்பனை மையத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தலா ரூ. 30 லட்சம் செலவில் தமிழகத்தில்

15 சந்தைகளை ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார் ககன்தீப் சிங் பேடி.

## சாலையோரங்களில் அதிகளவில் வளர்ந்துள்ள மருத்துவ குணம் கொண்ட துத்திச்செடிகள்!



தம்மம்பட்டி, கெங்கவல்லி பகுதிகளில் சாலையோரங்களில் அதிகளவில் பூத்துக்குலுங்கும் துத்திச்செடிகளை மூலநோய்க்கு பொதுமக்கள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.

தம்மம்பட்டி, கெங்கவல்லி பகுதிகளில் தொடர் மழைக் காரணமாக சாலையோரங்களில் துத்திச்செட்டிகள் ஆளுயரத்துக்கு வளர்ந்து புதர் போல் காணப்படுகின்றன. இந்த செடி, சிறந்த மூலிகையாக சித்தமருத்துவத்தில் கூறப்படுகிறது.

துத்திச்செடிகளில் கருந்துத்தி, பெருந்துத்தி, சிறியத் துத்தி, நாட்டுத்துத்தி, காட்டுத்துத்தி, நிலத் துத்தி என 29 வகைகள் உள்ளன. துத்திச்செடி, அதன் வேர், விதைகள் அனைத்தும் மருத்துவ குணம் கொண்டது.

உடல் உஷ்ணத்தைக் குறைத்து குளிர்ச்சியை ஏற்படுத்துகிறது.துத்தியை குளிர்ச்சித் தரும் மூலிகை என்கிறார் அகத்தியர்.

துத்தியின் மருத்துவ குணங்களை தெரிந்த இப்பகுதி மக்கள் அதனை நேரிடையாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். தம்மம்பட்டி, கெங்கவல்லி சுற்றுவட்டாரப்

பகுதிகளில் மஞ்சள் நிறத்தில் பூத்துக்குலுங்கும் துத்திச்செடிகளை பொதுமக்கள் மூலநோய்க்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இது குறித்து தம்மம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய அரசு சித்த மருத்துவர் ஆனந்த் கூறியது: துத்திச்செடி , மால்வேசி என்ற தாவரக் குடும்பத்தையும், வெண்டைக்காய் குடும்ப வகையைச் சேர்ந்தது. இதன் தாவரவியல் பெயர் அபுத்திலான் இண்டிகம் ஆகும். மழைக்காலத்தில் அதிகளவில் வளரும். துத்திச்செடி இலைகளை மூலநோய் கண்ட இடத்தில் அரைத்துக்கட்டும் வழக்கம் உள்ளது. இதனைப் பச்சையாகவும் சாப்பிடலாம். கஷாயமாகவும் அருந்தலாம் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பிரதமர் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ்30-ம் தேதிக்குள் காப்பீடு செய்ய வேண்டும்: வேளாண் ஆணையர் ககன்தீப் சிங் பேடி வலியுறுத்தல்



சம்பா மற்றும் குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வரும் 30-ம் தேதிக்குள் காப்பீடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசின் வேளாண் உற்பத்தி ஆணையர் ககன்தீப் சிங் பேடி வலியுறுத்தியுள்ளார்.

மத்திய அரசின் வேளாண்மை குறித்த திட்டங்களை விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் விழிப்புணர்வு பிரச்சார முகாம்களை நடத்தும் பொறுப்பு, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கள விளம்பரத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. கள விளம்பரத் துறையின் தமிழ்நாடு, புதுச்சேரி மண்டலம் சார்பில் இந்த சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் இம்மாதம் கடைசி வாரத்தில் இருந்து நடத்தப்பட உள்ளன.

இதையொட்டி, களவிளம்பரத் துறையின் அலுவலர்கள், மத்திய அரசின் ஊடக பிரதிநிதிகள், இசை - நாடகப் பிரிவு கலைஞர்களுக்கான பயிலரங்கு சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்த பயிலரங்கை தொடங்கிவைத்து ககன்தீப் சிங் பேடி பேசியதாவது:

இயற்கை சீற்றங்கள் மற்றும் வறட்சி போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்காக பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா) கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**8 லட்சம் விவசாயிகள்**

இத்திட்டத்தில், தமிழகத்தில் முதல் ஆண்டில் 7 முதல் 8 லட்சம் விவசாயிகள் மட்டுமே சேர்ந்தனர். ஆனால், இத்திட்டம் குறித்து தமிழக அரசு ஏற்படுத்திய விழிப்புணர்வின் விளைவாக தற்போது 15.50 லட்சம் விவசாயிகள் சேர்ந்துள்ளனர். விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,500 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வரும் 30-ம் தேதிக்குள் காப்பீடு செய்ய வேண்டும். இல்லையென்றால், விவசாயிகள் தங்கள் பயிருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான நஷ்டஈடு பெற முடியாது. பிரீமியத் தொகையை அருகில் உள்ள கூட்டுறவு வங்கிகள் அல்லது பொது சேவை மையங்களில் செலுத்தலாம்.

மேலும், சொட்டுநீர் பாசனத்தை ஊக்கப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு சொட்டுநீர் பாசன விவசாயத்துக்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து ரூ.803 கோடி மானியமாக வழங்கியுள்ளது. எனவே, விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ககன்தீப் சிங் பேடி பேசினார்.

இப்பயிலரங்கில், களவிளம்பர துறை இயக்குநர் எம்.அண்ணாதுரை, உதவி இயக்குநர் டாக்டர் டி.சிவக்குமார், பத்திரிகை தகவல் அலுவலக இயக்குநர் ஜெனரல் (தென்மண்டலம்) கே.முத்துக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

## 2 நாட்களுக்கு மிதமான மழைதான்:'காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தமிழகத்துக்கு பாதிப்பு இல்லை'



மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதியானது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ள நிலையில், தமிழகத்துக்கு பாதிப்பு இல்லை என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து வங்கக் கடலில் அடுத்தடுத்து குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதிகள் உருவாகி நிலைகொண்டிருந்தன. அதன் காரணமாக கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வந்தது. இந்நிலையில், இலங்கை அருகே நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வடக்கு நோக்கி நகர்ந்து சென்றதால் தமிழகத்தில் மழை குறைந்து வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக நிருபர்களிடம் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நேற்று கூறியதாவது:

மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி அதே இடத்தில் நிலவி வருகிறது. இது ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்துக்கு தென்கிழக்கே சுமார் 250 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தமிழக பகுதியில் இருந்து வெகு தொலைவில் இருப்பதால் தமிழகத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை. இது அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு நோக்கி நகர்ந்து படிப்படியாக வலுவிழக்கக்கூடும்.

அடுத்து வரும் 2 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சென்னைக்கு குறிப்பிடும்படியாக மழை ஏதும் இல்லை.

**தஞ்சாவூரில் 7 செ.மீ.**

புதன்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் கடலோர பகுதிகளில் ஒருசில இடங்களிலும் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக தஞ்சாவூரில் 7 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.